மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாட்டைப் பொதுவாகத்தான் கொண்டு கணக்கிடப்படுகின்றது. 18 சதவீதம் என்பது அந்த வகையிலேதான் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தந்த நகரத்தின் அமைப்பு அந்தந்த ஊரின் அமைப்பு என்று வருகின்ற நேரத்தில் அந்த எண்ணிக்கை பொருந்தி வருமா என்பது சந்தேகம். அவர்களுக்கு உறுப்பினர்களாக வருகின்ற நிலைமையே இல்லாமல் போய்விடுமோ என்ற நிலைமையிலேதான் அந்த எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது. தலைவராக வரவேண்டுமென்றால் ஒரு மரபையொட்டித்தான் அது சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே செய்யப்படுகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அல்ல. எனவே, அந்த மரபின் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றம் ஒரு முறையைக் கையாண்டு வருகின்றது.

அரசினர் மருத்துவமனை, மாயூரம்

* 557 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் கண்நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கண்நோய் மருத்துவமனையோடு இணைந்த ஒரு நடமாடு கண் நோய் மருத்துவமனையை ஏற்படுத்தி வாரம் ஒரு முறை மாயூரம் போன்ற முக்கிய நகரங்களுக்கு அனுப்புகின்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனையைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக வட்ட மருத்துவ மனைகளிலே எந்த எந்த மருத்துவ மனைகளிலே கண்நோய் மருத்துவப் பகுதிகள் தொடங்கலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்வதற்காக ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சென்று பார்த்து எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கத்திற்கு அண்மையிலே தெரிவிக்க இருக்கின்றார். அவர் தெரிவித்த பிறகு அதை ஆலோசனை செய்து இயன்ற அளவுக்கு அந்தப் பகுதிகளிலே அவை ஏற்படுத்தப்படும்.

* 558 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் ஒரு குருதி சேமிப்பு நிலையம் திறப்பதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

1971 சூலை 30]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரத்திலுள்ள ரோட்டரி கிளப் அந்த மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இத்தகைய இரத்த சேமிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கு நிதி உதவி தர முன் வந்திருக்கிறார்கள். அதை ஏற்று விரைவில் செயல்பட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த ரோட்டரி கிளப்-சுழல் கழகம் 15,000 ரூபாய் அளவிற்கு பல்வேறு கருவிகளை இந்தக் குருதி சேமிப்பு நிலையத்திற்கு வழங்கியிருக்கிறது. 15,000 ரூபாய் மதிப்புள்ள அந்தக் கருவிகள் இந்தச் சேமிப்பு நிலையத்தைச் செம்மையாக நடத்தப் போதுமானதாக இல்லை. அதை மேலும் ஒழுங்குபடுத்தி நடத்த அங்கு ஏற்படுத்த வேண்டிய சில ஏற்பாடுகள் இன்னும் பாக்கியாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்த பிறகு முறைப்படி இந்தக் குருதி சேமிப்பு நிலையம் செயல்படத் தொடங்கும்.

கால்நடைக் கன்றுகள் வளர்ப்பு

* 559 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நல்ல கால்நடைக் கன்றுகள் வளர்ப்பவர் களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மானியத்தொகை சமீபத்தில் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து சமீபத்தில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தமிழகத்தில் நல்ல கால் நடைக் கன்றுகள் வளர்ப்பவர்களுக்கு மானியத்தொகை உதவித் தொகை கொடுக்கும்படியான திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து முறையீடு ஏதும் பெறப்படவில்லை.

(உ) வினவிற்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்பதிலே சாதாரண மக்களும், நல்ல கால்நடைக் கன்றுகளை வளர்க்க மானியம் கொடுத்ததன் காரணமாக அதை வளர்ப்பதற்குப் பல்வேறு கிராமங்களிலுள்ள மக்கள் முன்வந்தார்கள். மானியம் நிறுத்தப்பட்டதால் இந்தக் கன்றுகளைச் சரியானபடி ஊட்டமுள்ள கன்றுகளை வளர்க்க வாய்ப்பில்லாமல் வியாபாரிகளுக்கு விற்றுவிடும் துர்ப்பாக்கியமான நிலை இருப்பதைப் போக்க அரசு மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கன்று வளர்ப்பதே அவைகளை நன்ருக வளரச் செய்து விற்பதற்காகத்தான், கன்றை வளர்த்து விற்ருல் லாபம் வருகிறதால் கன்றுகளை